**O.S. No. 85 /2018**

**Date:18.03 .2026**

**வா.சா.1 மகாலட்சுமி**

**3,4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் சொத்தில் பங்கு கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் எந்த ஊரில் இருக்கிறேன் என்றால் தடியன்பட்டியில் குடியிருந்து வருகிறேன். எனக்கு திருமணம் ஆகி 28 வருடம் ஆகிறது. நான் திருமணம் ஆன முதல் தடியன்பட்டியில் தான் வசித்து வருகிறேன். எனது தங்கை 2ம் வாதி சண்முகத்தாய் என்பவரும் தடியன்பட்டியில் தான் வசித்து வருகிறார். 1ம் பிரதிவாதி எனது தாயார். காளிமுத்து எனது சகோதரர். சண்முகத்தாய்க்கு திருமணம் ஆகி 25 வருடம் ஆகிறது. எனது அப்பா எந்த வருடம் காணாமல் போனார் என்று கேட்டால் எந்த வருடம் என்று தெரியாது காணாமல் போய் 25 வருடங்கள் ஆகிறது. எனது அப்பா காணாமல் போனது சம்மந்தமாக நாங்கள் போலிஸில் புகார் ஏதும் கொடுக்கவில்லை, செய்தி தாள் விளம்பரம் எதுவும் செய்யவில்லை. எனது அப்பா 25 வருடங்களுக்கு முன்பு காணாமல் போனதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும், எனவே, எனது தந்தை Civil Death அடைந்து விட்டார் என்று விளம்புகை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. நாலந்துள்ளா கிராமத்திற்கும் நான் குடியிருக்கும் தடியன்பட்டி கிராமத்திற்கும் இடையில் எத்தனை கிலோமீட்டர் தூரம் இருக்கும் என்றால் 25 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். வா.சா.ஆ.6 ல் உள்ள ராசா கோனார் என்பவர் எனக்கு நெருங்கி உறவினர் அல்ல. வா.சா.ஆ.6 ஆவணத்திலே காளிமுத்துவுக்கு பேச்சியம்மாளும், ராசா கோனாரும் சேர்ந்து தான் கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். ராசா கோனார் சேர்ந்து எழுதி கொடுத்ததற்கான காரணம் எனக்கு தெரியாது. 1வது அயிட்ட சொத்தில் முன்பு வீடு இருந்தது தற்போது அது இடிந்துவிட்டது, அதன் கதவு எண் தெரியாது நான் சின்னப் பிள்ளையாக இருக்கும்போதே இடிந்துவிட்டது. தபசில் 2மற்றும் 4வது அயிட்ட சொத்துக்கள் கூடுதலாக மதிப்புள்ளது என்றால் சரிதான். நான் படிக்கவில்லை. 2வது அயிட்ட சொத்திற்கு பிராதில் ரூ. 47,500/- மதிப்பு போட்டுள்ளோம் என்றால் சரிதான். 4 வதுஅயிட்ட சொத்திற்கு பிராதில் ரூ. 2,22,500 /- மதிப்பு போட்டுள்ளோம் என்றால் சரிதான். 3வதுஅயிட்ட சொத்திற்கு பிராதில் ரூ. 29,500 /-மதிப்பு போட்டுள்ளோம் என்றால் சரிதான். 3வது அயிட்ட சொத்தை 3, 4

பிரதிவாதிகள் காளிமுத்து என்பவரிடம் இருந்து கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணத்தை கிரையம் எழுதி கொடுக்கும்போதே எங்களுக்கு தெரியும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ஆவணம் பற்றி தெரியும் என்றாலும், வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. 3 வதுஅயிட்ட சொத்தை 3, 4 பிரதிவாதிகள் தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். 3, 4 பிரதிவாதிகள் கிரையம் பெறுவதற்கு முன்பாக 3 வது அயிட்ட சொத்தை 2 ம் பிரதிவாதி தான் அனுபவம் செய்து வந்தார் என்றால் சரிதான், அவ்வாறு அவர்கள் அனுபவம் செய்து வருவதை நாங்கள் ஆட்சேபணை எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். நாங்கள் வில்லங் சான்று போட்டபோது 3, 4 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்த விவரம் தெரியவந்தது. அதன் பின்பு எனது அம்மாவிடமும், சகோதரரிடமும் பங்கு கேட்டேன் அவர்கள் மறுத்து விட்டார்கள் அதனால் இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன். 3,4 ம் பிரதிவாதியிடம் பங்கு கேட்டோமா என்று கேட்டால் நாங்கள் சண்டைக்கு போனோம் அப்போது எனது சகோதரர் விற்ற சொத்தில் பங்கு இல்லை என்று கூறிவிட்டார். மற்ற சொத்துக்களிலும், எனது சகோதரரும் , தாயாரும் பங்கு தருவதாக சொன்னார்களா என்றால் இல்லை. நான் முதன் முதலாக எப்போது பங்கு கேட்டேன் என்றால் 2017 ல் பங்கு கேட்டேன். நாங்கள் தீர்வை செலுத்தியுள்ளோம் ஆனால் தீர்வை ரசீதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. கிராம அதிகாரி தீர்வைக்கான பணம் பெற்றுக்கொண்டு அதற்கான ரசீது கொடுக்கவில்லை. கடந்த 2 வருடங்களாக தீர்வைக்கான பணத்தை செலுத்தியுள்ளோம். 3, 4 பிரதிவாதிகளிடம் பங்கு கேட்டதாக எனது பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக எங்கள் பங்கையும் சேர்த்து கிரையம் பெற்றதாக 3, 4 பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினோமா என்றால் இல்லை. நானும், எனது சகோதரியும் சேர்ந்து எனது தாயார் மற்றும் சகோதரருடன் சொத்தை கூட்டாக அனுபவம் செய்யவில்லை என்றால் சரிதான். 3, 4 பிரதிவாதிகள் நல்லெண்ண கிரையதாரர்கள் என்பதால், பாகப் பிரிவினை செய்யும்போது 3 வது அயிட்ட சொத்து 3, 4 பிரதிவாதிகளின் பாகத்திற்கு ஒதுக்கப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. கூடுதலாக சொத்துக்கள் இருப்பதால் 3 வது அயிட்ட சொத்தினை 3, 4 பிரதிவாதிகளுக்கு ஒதுக்குவதால் எங்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை

பிரதிவாதிகள் வேறு நபர்களுக்கு விற்பனை செய்ய முயற்சி செய்யவில்லை என்றால் சரிதான். எனது தாயாரும், எனது சகோதரருமான 1, 2 பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகளுடன் நாங்கள் நல்ல பேச்சு வார்த்தையில் உள்ளோம் என்றால் சரியல்ல. 3, 4 பிரதிவாதிகளிடம் கூடுதலாக பணம் பறிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் 1, 2 பிரதிவாதிகளின் தூண்டுதலின் பேரில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ– 5 ஆவணத்தில் சர்வே எண். 760/1பி 56 ஏர்க்கு என்னுடைய அப்பா செல்லத்துரை மற்றும் சீனி மகன் சுடலைமாடன் பெயரிலும் கூட்டு பட்டா உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ– 5 ஆவணத்தில் 2 வது பட்டாவான பட்டா எண். 1376 ல் பு.எண். 759/2 க்கு 1.34.5 ஹெக்டேருக்கு எனது தந்தையுடன் சேர்ந்து கோபால் சாமி நாயக்கர் மகன் எல்லப்ப நாயக்கருக்கும் சேர்ந்து கூட்டு பட்டா உள்ளது என்றால் சரிதான். மேற்படி பட்டாக்கள் 2004 ம் ஆண்டில் வழங்கப்பட்டது என்றால் சரிதான். எனது தந்தை கிரையம் வாங்கிய வா.சா.ஆ. 1, 3, 4 ஆவணங்களின் அசலினை நான் தாக்கல் செய்துள்ளதால் எனது தாயார் மற்றும் சகோதரர் மேற்படி ஆவணங்களை எங்களிடம் கொடுத்து அவர்களின் தூண்டுதலின் பேரில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கு உண்மையான வழக்கு அல்ல என்றாலும், அது தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

Sd/–P.Mahindra Varma
Subordinate Judge,
Sankarankovil.